# சிங்கம்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

# சிங்கம்

நாட்டிற்கு நாடு அரசர் வேறுபடுவர். ஆனால் காட்டிற்கு அரசன் சிங்கம் மட்டுமே. காட்டு ராஜாவாக அனைவராலும் முடிசூட்டப்பட்ட விலங்கு சிங்கம். சிங்கத்தின் முழக்கமும் பிடரி மயிரும் நடையும் அதற்கு ஒரு கம்பீர தோற்றத்தை அளிக்கின்றன. அக்கம்பீர தோற்றமே சிங்கத்தினை காட்டின் அரசனாக முன்னெடுத்துச் செல்கின்றது. சிங்கம் பூனைக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாலூட்டி விலங்காகும். அதனுடைய அறிவியல் பெயர் 'பேந்ரா லியோ' (panthera lio) என்பதாகும். பூனைக்குடும்பம், விலங்குகளின் உருவ அமைப்பு, காலடித்தடம், பதுங்கிப் பாயும் வேட்டைத்திறன் போன்றவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது. பூனைக்குடும்பத்தில் சிங்கம், சிறுத்தை, புலி, பூனை போன்ற முப்பத்தாறு வகையான விலங்குகள் உள்ளன. இவ் விலங்குகளுள் பெரிய விலங்கு, சிங்கம் மற்றும் புலியாகும். இதனை ஆங்கிலத்தில் 'பிக் கேட்ஸ்' (big cats) என்பர். இக்குடும்ப விலங்குகள் அனைத்தும் தனித்து வாழும் இயல்புடையது. ஆனால் சிங்கம் மட்டும் குழுவாக அதாவது கூட்டமாக வாழும் வாழ்வியலைக் கொண்டது.

ஒவ்வொரு குழுவும் பதினைந்து அல்லது இருபது சிங்கங்களைக் கொண்டது. பெண் சிங்கம் மற்றும் குட்டிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். ஒன்றிலிருந்து மூன்று வயது வரையிலான ஆண் சிங்கங்களின் எண்ணிக்கை ஐந்திற்கும் குறைவாக இருக்கும். ஆண் சிங்கம் வயது வந்தவுடன் குழுவிலிருந்து பிரிந்து சென்றுவிடும். பின்னர் அதன் தலைமையில் புதிய ஒரு குழுவினைத் தோற்றுவிக்கும். சில சமயங்களில் மற்ற குழுவில் உள்ள குட்டிகளைக் கொன்று பெண் சிங்கத்துடன் இணைந்து தனது சந்ததியினை விருத்தியடையச் செய்யும்.

சிங்கங்கள், குடும்ப உறுப்பினர்களிடையே நல்ல நட்பினைப் பேணும். மகிழ்ச்சிகரமான தருணங்களில் உடலோடு உடல் ஒட்டி உரசுதல், நக்குதல், செல்லமாகக் கடித்தல், முன் கால்களால் வலிக்காமல் அறைதல், தலைகீழாகப் படுத்து கால்களை விரித்தல் எனப் பல முறைகளில் அன்பை வெளிப்படுத்தும். ஆகையால் சிங்கத்தினை 'குடும்ப விலங்கு' அல்லது சமூக விலங்கு என்பர்.



சிங்கங்கள், வேங்கை போல அடர்ந்து செழித்த காடுகளில் வாழாமல் முட்புதர், குறுமரங்கள், பாறைகளைக் கொண்ட திறந்தவெளி மற்றும் வறண்ட காடுகளில் வாழ்வதையே விரும்பும். சிங்கங்கள், இரவு நேரத்தில் வேட்டையாடும். இரவில் மனிதர்களை விட ஆறு மடங்கு அதிகமான பார்வைத் திறனைக் கொண்டது.




வரிக்குதிரை, எருமை, இளம் யானை, காண்டாமிருகம், நீர்யானை, மான், ஒட்டகச்சிவிங்கி போன்ற விலங்குகளை வேட்டையாடி உண்ணும். வேட்டையாடுவதிலும் சிங்கங்கள் குழு மனப்பான்மையையே மேற்கொள்ளும். பெண் சிங்கங்களும் குட்டிகளும் இரையைச் சுற்றி வளைத்துத் தாக்கும். மேலும் தாவரங்களிலும் புல்தரைகளிலும் பதுங்கி இருந்து பாயும். கூரிய நகங்களினால் இரையின் கழுத்து மற்றும் குரல்வளையைத் தாக்கி கடித்துக் கொல்லும். இத்தகைய வேட்டையில் பெண்சிங்கங்களின் பங்கு முதன்மையானது.



சில சமயங்களில் ஆண் சிங்கங்களும் கலந்து கொள்ளும். வேட்டையில் பெற்ற இரையினை முதலில் ஆண் சிங்கமும் அடுத்து பெண் சிங்கமும் இறுதியாக குட்டிகளும் உண்ணும். குட்டிகளுக்கு உணவளித்தல், பராமரித்தல் போன்ற பணிகளையும் பெண் சிங்கமே மேற்கொள்ளும். உணவு கிடைக்காத சமயத்தில் எலி, பல்லி, ஆமை மற்றும் முதலைகள் கூட சிங்கத்தின் உணவாகும்.

சிங்கம் உண்ட மிச்ச உணவினை ஓநாய், கழுதைப் புலி போன்ற விலங்குகள் உண்ணும். உணவிற்காக மட்டுமே பிற விலங்குகளைக் கொல்லும். மற்ற நேரங்களில் எந்த விலங்கினையும் துன்புறுத்தாது.




ஒரு சிங்கக்கூட்டம் சுமார் இருநூற்றைம்பது (250) சதுர கிலோமீட்டர் நிலப்பகுதியைக் கொண்டிருக்கும். இந்தக் குறிப்பிட்ட நிலப்பகுதியைப் பாதுகாப்பது ஆண் சிங்கத்தின் பணியாகும். மரங்களில் நகங்களால் கீறுதல், சிறுநீரைப் பீச்சுதல் மூலமாக எல்லையினை நிர்ணயிக்கும். தனது எல்லைக்குள் பிற விலங்குகள் மற்றும் வேறு சிங்கங்களை அனுமதிக்காது.

பெண் சிங்கத்தின் கர்ப்ப காலம் நூற்றிப் பத்து நாட்கள் அல்லது நான்கு மாதங்கள். மூன்று அல்லது நான்கு குட்டிகளை ஈனும். ஒரு குட்டியின் எடை சராசரி மூன்று கிலோகிராமாக இருக்கும். குட்டிகளுக்கு, சிறுத்தை, கழுதைப்புலி மற்றும் பிற குழுவைச் சேர்ந்த ஆண் சிங்கங்களினால் ஆபத்துக்கள் ஏற்படும். ஒரு குழுவில் பல பெண் சிங்கங்கள் ஒரே நேரத்தில் குட்டி ஈனுவதால் வேறுபாடின்றி அனைத்துக் குட்டிகளையும் பேணும். குட்டிகள் ஒரு வயதிற்குள் தன் முதல் வேட்டையைத் துவங்கும். ஐந்து அல்லது ஆறு வயதிற்குள் முழுமையாக வளர்ச்சியடைந்து விடும்.

சிங்கங்களின் நிறம் இளம் பழுப்பு மற்றும் இளம் மஞ்சள் கலந்த கலவையாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாலின வேறுபாட்டைப் பிடரி மயிர் கொண்டு அறியலாம். ஆண் சிங்கங்களுக்கு மட்டுமே பிடரி மயிர் காணப்படும். பிடரி முடிகள் இரண்டு வயதிற்கு மேல் கழுத்திலிருந்து வயிற்றின் கீழ் பகுதி வரை வளரத்துவங்கி ஆறு வயதிற்குள் முழுமையடைந்து விடும்.




ஆண் சிங்கங்கள் முழங்கும் ஒலியின் அலைவரிசை நூற்றிப் பதினான்கு (114) டெசிபலாகும். ஐந்து கி.மீ. முதல் எட்டு கி.மீ. தொலைவு வரை கேட்கும். சிங்கத்தின் முழக்கமானது இடைவெளியுடன் கூடிய கரகர ஒலியோடு கேட்கும். பெண் சிங்கமோ ஓரிரு முறை மட்டுமே முழங்கும்.

குறிப்பாக சிங்கங்கள் சூரிய மறைவிற்குப் பின் முழங்கும். பிற விலங்குகளை எச்சரிக்கவும் தனது குழுவினர் எல்லையைத் தாண்டாமல் இருப்பதற்காகவும் சிங்கங்கள் முழங்குவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



சிங்கங்கள் நடக்கும் போது முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டே செல்வது அதன் இயல்பாகும். மேலும் மணிக்கு முப்பத்தைந்து (35) கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும். சிங்கங்கள் பெரும்பாலும் தங்கள் வாழ் நாட்களை ஓய்வு எடுப்பதிலேயே கழிக்கின்றன. ஒரு நாளைக்கு சுமார் பதினாறு (16) மணி நேரத்தில் இருந்து இருபது (20) மணி நேரம் வரைதூங்கும் அல்லது ஓய்வாகப் படுத்திருக்கும். சிங்கத்தின் ஆயுட்காலம் பத்திலிருந்து பதினைந்து ஆண்டுகளாகும்.

சிங்கங்களை ஆசிய சிங்கம், ஆப்பிரிக்க சிங்கம் என இரண்டு வகைப்படுத்தலாம். ஆப்பிரிக்க சிங்கம் ஆப்பிரிக்க கண்டத்தில் குறிப்பாக, அங்கோலா (Angola), போட்ஸ்வானா (Botswana), மொசாம்பிக் (Mozambique), தான்சானியா (Tanzania), தெற்கு சூடான் (South Sudan) போன்ற நாடுகளில் காணப் படுகின்றன. ஆசிய சிங்கங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்கம், சிரியா, மத்திய கிழக்கு நாடுகள் தொடங்கி வட மற்றும் மத்திய இந்தியா வரை பரவியிருந்தன. ஆனால் தற்போது இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் தேசியப் பூங்காவில் (Gir National Park) மட்டுமே காணப்படுகின்றன.





ஆசிய சிங்கங்கள் ஆப்பிரிக்காவின் பாரம்பரியத்திலிருந்து வந்தவை. ஆசிய சிங்கங்களுக்கும் ஆப்பிரிக்க சிங்கங்களுக்கும் இடையே நிறம், உருவம், குழுவில் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் உண்ணும் உணவு போன்றவற்றில் வேறுபாடு காணப்படும். ஆசிய ஆப்பிரிக்க சிங்கங்களில் ஆண் சிங்கங்களுக்கு இடையிலான வேறுபாடு குறிப்பிடத்தக்கது.


ஆப்பிரிக்க சிங்கம்



ஆசிய சிங்கம்


கீழ்க்கண்ட அட்டவணை அதை தெளிவுபடுத்தும்.

| ஆப்பிரிக்க சிங்கம் | ஆசிய சிங்கம் |
|---|---|
|  |  |
| 1. உருவில் பெரியது மூக்கிலிருந்து வால் வரை பதினோரு அடி (11). | 1. உருவில் சிறியது மூக்கிலிருந்து வால் வரை ஒன்பது அடி (9). |
| 2. ஆண் சிங்கம் நூற்றைம்பது முதல் இருநூற்று இருபத்தேழு (150 - 227) கிலோ வரை எடை கொண்டது. | 2. ஆண் சிங்கம் நூற்றறுபது முதல் நூற்றித் தொண்ணூறு (160-190) கிலோ வரை எடை கொண்டது. |
| 3. பெண் சிங்கம் நூற்றிருபது முதல் நூற்றைம்பது (120-150) கிலோ கிராம் எடை கொண்டது. | 3. பெண் சிங்கம் நூற்றிருபது முதல் நூற்றைம்பது (120-150) கிலோ கிராம் எடை கொண்டது. |
| 4. அடர்த்தியான அதிகமான பிடரி முடிகள். | 4. அளவிலும் அடர்த்தியிலும் குறைவான பிடரி முடிகள். |
| 5. காதுகளைப் பார்க்க முடியாது. பிடரி முடிகளுக்குள் மறைந்து விடும். | 5. காதுகளைப் பார்க்க முடியும். |
| 6. நீண்ட வாலினையும் வாலின் நுனியில் அடர்த்தியான குஞ்சத்தையும் (முடி) உடையது. | 6. வாலும் வாலின் முடியும் அளவில் சிறியது. |
| 7. குழுவில் பங்கு அதிகம். | 7. குழுவில் பங்கு குறைவு. |
| 8. அதிக எடையுள்ள (காட்டு எருமை, வரிக்குதிரை) விலங்குகளை வேட்டையாடும். | 8. குறைந்த எடையுள்ள விலங்குகளை வேட்டையாடும். |
|  |  |

சிங்கம் மனித வாழ்வில் பல்வேறு சூழல்களில் உவமைப்படுத்தி பேசப்படும் ஒரு விலங்காகும். இலக்கியம், ஓவியம், நாடுகளின் சின்னம் போன்ற பலவற்றிலும் சிங்கங்கள் இடம்பெறுகின்றன. அல்பேனியா (Albania), பெல்ஜியம் (Belgium), பல்கேரியா (Bulgaria), இங்கிலாந்து (England), எத்தியோப்பியா (Ethiopia), லக்ஸம்பர்க் (Luxembourg), நெதர்லாந்து (Netherland) சிங்கப்பூர் (Singapore) டென்மார்க் (Denmark) நார்வே (Norway) இலங்கை (Srilanka ) ஆகிய நாடுகளின் தேசிய விலங்கு சிங்கமாகும். மேலும் இந்தியாவின் தேசியச்சின்னமும் சிங்கமே. இத்தகைய சிறப்புடைய சிங்கங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது.

இருபதாயிரம் ஆப்பிரிக்க சிங்கங்களுடன் ஒப்பிடுகையில் ஆசிய சிங்கங்கள் ஐநூறுக்கும் குறைவான எண்ணிக்கையையே கொண்டுள்ளன. ஆசிய சிங்கங்கள் அழிந்து வரும் விலங்குகளின் பட்டியலில் உள்ளன. பொதுவாக வன உயிர்கள் அழிவதற்கு அவற்றின் உறைவிடங்கள் அழிக்கப்படுவதே காரணம்.





மனிதப் பெருக்கம் காலநடைப் பெருக்கம் சாலைகள் இரயில் பாதைகள்

மனிதப் பெருக்கம், கால்நடைப் பெருக்கம், வேளாண் விரிவாக்கம், சாலைகள், இரயில் பாதைகள் தொழிற்புரட்சி போன்றவை வனவிலங்குகளின் வாழிடங்களைக் குறுகச் செய்கின்றன.

தற்காலத்தில் சிங்கங்களைச் செயற்கைக்கோள் உதவியுடன் இயங்கும் ரேடியோ காலர்களைப் பொருத்தி கண்காணிக்கின்றனர். எனினும் வனவிலங்குகளுக்கு மனிதர்களின் அன்பும் ஆதரவும் அவசியம். வனவிலங்குகளை நேசித்து! காட்டின் அரசனைப் பாதுகாப்போம்!



***

**காட்டின் அரசன்!**

**கம்பீரத்தின் பிரதிபலிப்பு!**

**வீரத்தின் அடையாளம்!**

**சீற்றத்தின் உச்சம்!**

**போன்ற புகழினை உள்ளடக்கிய**

**சிங்கத்தின் வாழ்வியலை அறிந்த**

**உங்களுக்கு**

வறண்ட நிலத்தில் வாழும் முறை பற்றி கற்றுத்தர வருகிறது கப்பல் ஒன்று! கற்க எண்ணும் உள்ளங்களே எனது அடுத்த நூலுக்குள் செல்லுங்கள்.



இரா.மாரியம்மாள்., M.A.,M.Phil.,
[மொழி ஆய்வாளர்]

உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்
மற்றும் வரைகலையாளர்கள்.

**உலகத்தமிழ்க் கல்விக்கழகம்**

www.worldtamilacademy.com www.tamilacademy.com